
# அர்ப்பணிப்பின் சக்தி



ஆசீஸ் ராய்சூர்

இலவச விநியோகத்திற்கு மட்டுமே
ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்ட் அவுட்ரீச், பெங்களூர், இந்தியா அச்சிட்டு விநியோகித்தது.
முதல் பதிப்பு அச்சிடப்பட்டது: ஜனவரி 2004
திருத்தப்பட்ட பதிப்பு: மே 2020
தமிழில் மொழியாக்கம்: ஜூன் 2021

தொடர்பு தகவல்:
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: **apcwo.org**

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத மேற்கோள்களும் புனித பைபிளான புதிய கிங் ஜேம்ஸ் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமை © 1982 தாமஸ் நெல்சன், இன்க்., அனுமதியால் பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.
விவிலிய வரையறைகள், ஹீப்ரு மற்றும் கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள் பின்வரும் ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றன:

Thayer's Greek Definitions. Published in 1886, 1889; public domain.
Strong's Hebrew and Greek Dictionaries, Strong's Exhaustive Concordance by James Strong, S.T.D., LL.D. Published in 1890; public domain.
Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words, © 1984, 1996, Thomas Nelson, Inc., Nashville, TN.

**நிதி பங்குதாரர்**

ஆல் பீபிள்ஸ் சர்சீன உறுப்பினர்கள், கூட்டாளர்கள் மற்றும் நண்பர்களின் நிதி உதவி மூலம் இந்த வெளியீட்டின் உற்பத்தி மற்றும் விநியோகம் சாத்தியமானது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் வளப்படுத்தப்பட்டிருந்தால், ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை தயாரித்து விநியோகிக்க உதவ நிதி ரீதியாக பங்களிக்க உங்களை அழைக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give ஐப் பார்வையிடவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு செய்வது என்பது குறித்து இந்த புத்தகத்தின் பின்புறத்தில் உள்ள “ஆல் பீபிள்ஸ் சுரச்சசுடனான கூட்டாளர்” பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**அஞ்சல் பட்டியலில்**

ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்தும் இலவச வெளியீடுகள் வெளியிடப்படும்போது அறிவிக்க, நீங்கள் apcwo.org இல் எங்கள் அஞ்சல் பட்டியலுக்கு குழுசேரலாம்.

# அர்ப்பணிப்பின் சக்தி

# அறிமுகம்

**அறிமுகம்** .......... 1
1. **அர்பணிப்புள்ள நபரின் பண்புகள்** .......... 3
2. **அர்பணிப்போடு வாழ்வதில் உள்ள சிறப்பு** .......... 7
3. **நீங்கள் அர்பணிப்புடன் இருக்கிறீர்களா?** .......... 12

# அறிமுகம்

அர்ப்பணிப்பு என்பது மதச்சார்பற்ற உலகிலும் சபையிலும் இந்த நாட்களில் வருவது கடினம். ஏனெனில், நம்மில் பெரும்பாலோர் வசதியானதைச் செய்ய விரும்புகிறோம். ஆகவே அர்பணிப்புள்ளவர்களைக் கண்டுபிடிப்பது கடினமாகிறது.

அர்பணிப்புடன் இருப்பதன் அர்த்தம் என்ன? ஒரு குறிப்பிட்ட பொறுப்பில் உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க வேண்டும் என்பதாகும். இதன் பொருள் என்னவென்றால் நம் கடமையைப் பொறுப்புடன் செய்வதாகும். அதாவது ஒன்றைத் தேர்வு செய்து, அதிலிருந்து நம்மை மாற்றமுடியாதபடி அதனுடன் ஒட்டிக்கொள்ளும்போது நாம் அதில் அர்பணிப்புடன் இருக்கிறோம். அர்பணிப்புடன் இருப்பது என்பது ஒரு இலக்கை நோக்கிய நமது பயணத்தில் விடாமுயற்சியை வெளிப்படுத்துவதாகும்.

உதாரணமாக, நாம் பேசும் சொற்களைக் கவனியுங்கள். “நேரம்” பற்றி நாம் அளிக்கும் வாக்குறுதிகளைப் பற்றி சிந்தியுங்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரை சந்திப்போம் என்று நாம் சொல்கிறோம், பின்னர் நாம் அதைப் பற்றி மிகவும் சாதாரணமாக இருக்கிறோம். நாம் அரை மணி நேரம் தாமதமாக வந்து, அது சாதாரணமானது என்று நினைக்கலாம். ஆனால் அது, நம் சொன்ன வார்த்தையில் நம்முடைய அர்பணிப்பின்மையைக் காட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரை சந்திப்போம் என்று நாம் கூறும்போது, அதைச் செய்துமுடிக்க நாம் கடமைப்பட்டிருக்க வேண்டும். சில நேரங்களில், போதகர்கள் மற்றும் தேவ ஊழியர்கள்கூட நேரத்தைப் பற்றிய விசயங்களில் மிகவும் மந்தமாக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு நான் வெட்கப்படுகிறேன். நீங்கள் கடவுளின் ஊழியராக இருந்தால், உங்கள் வார்த்தைகளில் அர்ப்பணிப்பை நிரூபிக்கக் குறித்த நேரத்தை கடைப்பிடிப்பதுதான். நீங்கள் ஒன்றைச் சொல்லும்போது,

அதைச் அப்படியே செய்துமுடிக்கும் தீர்மானத்தோடு முயற்சி செய்யுங்கள்.

அர்பணிப்புடன் இருப்பதைப் பற்றி வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. "எப்படி ஒருவன் இரண்டு பேர்களுக்கு வேலை செய்தால், அந்த இரண்டு பேர்களையும் திருப்த்திப்படுத்த முடியாமால், ஒருவனுக்கு நல்லவனாகவும், இன்னொருவனை அசட்டை செய்தும் வாழ்வானோ, அதுபோல கடவுளுக்கும் பிரியமாக வாழவேண்டும், இந்த உலக சுகங்களையும் நன்கு அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் வாழ்வு இருக்கிறது" (மத்தேயு 6:24) என்று கர்த்தராகிய இயேசு கூறியுள்ளார். இது நம்முடைய உள்ளார்ந்த இயல்பு என்று இயேசு இங்கே குறிப்பிடுகிறார். மனிதனுக்கு ஒருவருக்கொருவர் முரணான இரண்டு கடமைகளை நிறைவேற்ற முடியாது. உதாரணமாக, நாம் கடவுளுக்கும் உலக சுகபோகத்திற்கும் சேவை செய்ய முடியாது. ஒன்றில் கவனம் செலுத்தும்பொழுது மற்றொன்றை நாம் அசட்டை செய்வோம். உலக சுகபோகத்தையும் அனுபவிக்கவேண்டும், கடவுளோடும் நட்பாக இருக்க வேண்டும் என்றால் அது முடியாது. "தன்னுடைய (சொந்த) கணவனுக்கோ, மனைவிக்கோ உண்மையில்லாமல், மற்றவர்களோடு சேர்ந்து விபச்சாரம் பண்ணுகிறதுபோல, கடவுளைவிட உலக காரியங்கள் மீது ஆசை வைத்து வாழ்கிற நீங்கள், அவருடைய எதிரிகள்!" (யாக்கோபு 4:4). ஒன்று நாம் கடவுளின் நண்பராகவோ அல்லது உலகின் நண்பராகவோ ஆகிவிடுவோம். இரண்டையும் சேர்த்து நம்மால் செய்ய முடியாது. நாம் ஒரு எஜமானனுக்குத்தான் உண்மையாக இருக்க முடியும். இயேசு நம்மை அவரோடு உண்மையாகப் பழக அழைக்கிறார், கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையோடு வலுவான அர்ப்பணிப்போடு நம் வாழ்வு கட்டமைக்கப்பட வேண்டும். இந்த புத்தகம் அர்ப்பணிப்பின் சக்தியை வலியுறுத்துகிறது மற்றும் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உறுதியாக இருக்க உங்களை ஊக்குவிக்கும்.

# 1. அர்ப்பணிப்புள்ள நபரின் பண்புகள்

நாம் ஏதாவது ஒரு விஷயத்தில் உண்மையிலேயே அர்ப்பணிப்போடு இருக்கிறோம் என்று எப்படி சொல்ல முடியும்?

நாம் அதற்காக எந்த விலையையும் செலுத்த விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறோமா? என்பதின் அடிப்படையிலேயே சொல்லமுடியும்.

ஒரு நபர் கடவுளின் அழைப்பில் அர்ப்பணிப்புடன் இருந்தால், அந்த அழைப்பை நிறைவேற்ற அவர் எந்த விலையையும் செலுத்த தயாராக இருப்பார். சிலர் கடவுளை சேவிக்க விரும்புகிறார்கள், ஆனால், கடவுள் விரும்பும் இடத்தை அவர்கள் அடைய கடினமாக உழைக்க விரும்புவதில்லை. உங்கள் வாழ்க்கையைக் குறித்து கடவுளுக்கு ஒரு திட்டமும், அதைச் செய்ய அழைப்பும் இருந்தாலும், அந்த விஷயங்கள் தானாக நடைபெறாது.

நீங்கள் கடவுளோடு சேர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற, ஒரு உடன் வேலைக்காரராக செயல்பட வேண்டும். உங்கள் வாழ்க்கையில் அவருடைய நோக்கங்களை நிறைவேற்ற நீங்கள் சில தியாகங்களைச் செய்ய கடவுள் உங்களை அழைக்கலாம். உங்களைப் பற்றி கடவுளின் நோக்கங்களைச் செய்ய நீங்கள் உண்மையிலேயே அர்ப்பணிப்போடு இருந்தால், அவர் உங்களிடமிருந்து எதை எதிர்பார்த்தாலும், நீங்கள் அதைச் செய்ய அல்லது இழக்கத் தயாராக இருப்பீர்கள்.

சில விசுவாசிகளைப் பற்றி பைபிள் கூறுகிறது, “அவர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், சாட்சியின் வார்த்தையினாலும் பிசாசை வென்றார்கள், அவர்கள் தங்கள் வாழ்க்கையை நேசிக்காமல் மரணத்தையும் துணிந்து எதிர்கொண்டார்கள்” (வெளிப்படுத்துதல் 12:11). இந்த மக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தங்களுக்குக் கொடுத்த பொறுப்பில்

அர்பணிப்புடன் இருந்தார்கள், அதற்காக அவர்கள் தங்கள் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருந்தார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்த பொறுப்பில் நாம் அர்பணிப்புடன் இருந்தால், நம்முடைய எஜமானருக்காக நம் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருப்போம்.

## அனைத்து தடைகளையும் கடக்க விருப்பம்

கிடைத்த பொறுப்பில் அர்பணிப்புடன் இருப்பவர், அந்த அர்பணிப்பைக் காக்க அனைத்து தடைகளையும் கடக்க தயாராக இருக்கிறார். அவர் தனக்குரிய பொறுப்பிலிருந்து எளிதில் விலகுவதில்லை, அந்தப் பொறுப்பை நிறைவேற்ற எந்த வசதிகளையும் இழக்கத் தயங்குவதில்லை. அப்படிப்பட்டவர் தன் பொறுப்பில் மிகவும் அர்பணிப்போடு இருக்கிறார். அதை நிறைவேற்றுகிற வழியில் வரும் தடைகளைப் பொருட்படுத்தாமல், அர்ப்பணிப்பைக் காக்க எல்லாவற்றையும் சமாளிக்க அவர் மிகுந்த முயற்சி செய்வார். ஆனால், தன்னுடைய பொறுப்பில் அர்பணிப்பு இல்லாத ஒரு நபர், தனக்கு வசதியாக இருந்தால் மட்டுமே தான் எடுத்த பொறுப்பை நிறைவேற்றுவார். அவர் எடுத்த பொறுப்பை நிறைவேற்றுவதில் கொஞ்சம் கடினமாக இருக்கும்போது, அவர் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற தன் மனதைச் செலுத்துவதில்லை.

## பொறுப்பை அர்பணிப்புடன் செய்ய கவனம செலுத்துதல்

ஒரு நபர் தான் எடுத்த பொறுப்பில் அர்பணிப்புடன் இருக்கும்போது, அவர் அதைச் செய்து முடிக்க மிகுந்த கவனம் செலுத்துவார், அவர் கவனத்தை எவரும் அவ்வளவு எளிதில் திசைதிருப்ப முடியாது. ஆனால், பொறுப்பில் அர்பணிப்பில்லாதவர், தனது வசதியை மாத்திரமே கவனத்தில் வைத்து அதோடு நகர்ந்து செல்வார்.

**லூக்கா 9:57-62**

**57 அவ்வாறாக அவர்கள் எருசலேம் நகரம் நோக்கி சென்றுகொண்டிருக்கும் பொழுது, அவர்களோடு நடந்துவந்த ஒரு சீடன் இயேசுவிடம், எதையோ எதிர்பார்த்தவனாக, "நீங்கள் எங்கே போனாலும், நான் உங்களோடேயே வருவேன்!" என்றான்.**

**58 அதற்கு இயேசு அவனிடம், "நரிகள் படுத்து உறங்க குழிகளைத் தேடிவைத்துள்ளது; பறவைகள் தங்குவதற்குக் கூடுகளை கட்டிவைத்துள்ளது; ஆனால், கடவுளிடம் இருந்து மனிதனாகப் பிறந்த நான் தங்குவதற்கோ, உறங்குவதற்கோ இதுவரை எதையுமே தேடிவைக்கவில்லையே!" என்றார்.**
**59 பின்பு, இயேசு ஒருவனிடம், "நீ என் போதனைகளைப் பின்பற்றி, எனக்குச் சீடனாக இரு" என்றார். அதற்கு அவன், "குருவே! என் அப்பாவிற்கு வயதாகிவிட்டது, அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து, அவர் மரித்தவுடன், அவரை அடக்கம்பண்ணிய பின்பு, உங்கள் சீடனாக வாழ்கிறேன்" என்றான்.**
**60 இயேசு அவனிடம், "கடவுள் ஆளுகையின் கீழ் வாழாதவர்கள் அனைவருமே, உயிரில்லாதவர்கள்தான். ஆகவே, அது போன்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய, அப்படிப்பட்டவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், நீயோ, மனிதர்களை எப்படியெல்லாம் கடவுள் ஆளுகை செய்ய விரும்புகிறார் என்பதை மக்களுக்குச் சொல்லுகிற என் வேலையைச் செய்ய வா" என்றார்.**
**61 பின்பு, வேறொருவன் யேசுவிடம், "குருவே! நான் உங்களுக்குச் சீடனாக வாழ ஆசைப்படுகிறேன்; ஆனால், முதலாவது என் குடும்பத்தாரின் அனுமதியைப் பெற்றுவர விரும்புகிறேன்" என்றான்.**
**62 இயேசு அவனிடம், "நிலத்தை உழுது, பயிர்செய்ய வேண்டும் என்று தீர்மானித்த ஒருவன், அடுத்தடுத்து என்னென்ன செய்யவேண்டும் என்பதில்தான் அவன் சிந்தைகள் இருக்க வேண்டுமேயொழிய, இதெல்லாம் எப்படிச் செய்து முடிப்பது? என்று, யோசிப்பானானால், அவனால் ஒருபோதும் முன்னேற முடியாது. அதுபோலவே, கடவுள் ஆளுகையைப் பற்றி மக்களுக்கு அறிவிக்கிற வேலையும் இருக்கிறது" என்றார்.**

“இயேசுவே, நான் உங்களைப் பின்பற்றி வாழுவேன்” என்று ஒருவர் தீர்மானத்தை எடுக்கும்போது, அந்த தீர்மானத்திலிருந்து சற்று விலகி வேறு ஒன்றையும் பின்பற்றி, இரண்டு பாதைகளில் வாழ்வதை அவர் விரும்புகிறதில்லை என்பதையே அவர் நம்மிடம் வலியுறுத்த விரும்புகிறார். ஏனெனில், இயேசுவைப் பின்பற்றி வாழும் நம்முடைய அர்ப்பணிப்பு, அவர்மீது முழுக்கவனம் செலுத்தி வாழ்வதற்கும், பூமிக்குரிய மற்ற உறவுகள் அனைத்தும் அடுத்த இடமே என்ற அர்பணிப்பாகும். இருப்பினும், உங்கள் குடும்பத்தினரையோ அல்லது அன்பானவர்களையோ மறந்துவிட இயேசு சொல்லவில்லை. இங்கே முக்கியமானது என்னவென்றால், அவ்வாறாக தீர்மானித்த ஒருவர் தன் வாழ்வின் முழுகவனத்தையும் அவர்மீது. அவரைப் பின்பற்றி வாழ்வதின்மீது செலுத்துகிறார். ஆகவே, மற்ற முக்கியமான குடும்பப் பொறுப்புகளால் கூட அவர் கவனத்தைத் திசைதிருப்ப

வாய்ப்பில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான அழைப்பிலிருந்து மற்ற விஷயங்கள் எதுவும் அவரை திசை திருப்ப முடியாது.

# 2. அர்ப்பணிப்போடு வாழ்வதில் உள்ள சிறப்பு

அர்ப்பணிப்போடு வாழ்வதில் உள்ள சிறப்பு என்ன? எல்லோரும் தங்களுக்கு வசதியான வாழ்வைத் தேடி வாழும்போது, நீங்களும் நானும் மட்டும் ஏன் அர்ப்பணிப்போடு வாழவேண்டும்? அர்ப்பணிப்போடு வாழ்வதில் உள்ள சிறப்புக்கள் தான் என்னென்ன?

## பெலன், ஸ்திரத்தன்மை மற்றும் உறுதி

நாம் ஒரு விசயத்தில் அர்ப்பணிப்புடன் வாழத் தீர்மானிக்கும்பொழுது, எப்படியொரு கடினமான வாழ்க்கைச் சூழ்நிலை ஏற்பட்டாலும், நான் தீர்மானித்த விசயத்தில் பெலனோடும், ஸ்திரத்தன்மையோடும், உறுதியோடும் வாழும் மனநிலையை அது தருகிறது.

**யாக்கோபு 1:8**
**ஏனெனில், இதைச் செய்வதா, அதைச் செய்வதா என்று இரண்டு மனதோடு வாழ்கிறவர்களால் எதையுமே உறுதியாகச் செய்ய முடியாதல்லவா?**

விசுவாசத்தோடு எவ்வாறு ஜெபிக்கவேண்டும் என்று யாக்கோபு எழுதியபின்பு, இதைச் செய்வதா, அதைச் செய்வதா என்று இரண்டு மனதோடு வாழ்கிறவர்கள் நிலையைப் பற்றி சுருக்கமாக எழுதுகிறார்.

அவ்வாறான மனநிலையில் வாழ்கிறவர்கள் தாங்கள் எடுத்த தீர்மானத்தில் உறுதியில்லாமல் வாழ்வதால், அவர்கள் பொறுப்பெடுத்ததைச் செய்து முடிப்பார்கள் என நம்ப முடியாது என்று விளக்குகிறார். அதாவது, எடுத்த தீர்மானத்தில் உறுதியோடு வாழ்கிற மனநிலையில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்பில் அர்ப்பணிப்போடு இருப்பதால், அவர்கள் அதை நிச்சயம் செய்து முடிப்பார்கள் என நம்ப முடியும் என்று அவர் அவ்வாறு எழுதியதை நாம் வித்தியாசமாகவும் சிந்திக்கலாம்.

# ஆசீர்வாதம்

எடுத்த தீர்மானத்தில் அர்பணிப்புடன் இருப்பவர், அர்பணிப்பு இல்லாத நபரை விட அதிக அளவில் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிக்க முடியும்.

**நீதிமொழிகள் 28:20**
**உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்;**

எடுத்த தீர்மானத்தில் அர்பணிப்புடன் இருக்கிற ஒருவரால்தான் அந்த செயலை உண்மையுடன் செய்யமுடியம். அவர், தான் எடுத்த பொறுப்பை முழு மனதோடும் அர்ப்பணிப்போடும் செய்வதால்தான், அவரால் அதை உண்மையுடன் செய்ய முடிகிறது. ஒரு காரியத்தை முழு மனதுடன் செய்கிறவரைப் போல, அரை மனதுடன் செய்கிறவரால் அதை ரசித்துச் செய்யமுடியாது. முழு மனதுடன் ஒரு செயலைச் செய்பவர் வெளிப்படையாக சிறப்புடன் அந்த வேலையைச் செய்வார். ஆகவே அவருக்கு அந்த பொறுப்பைச் செய்வதின் மூலம் அதிக ஆசீர்வாதமும் கிடைக்கிறது.

உடல் செயல்படும் விதம் பற்றி சிந்தியுங்கள். உடலின் பாகங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒன்றாகச் செயல்பட வேண்டும் என்று கடவுள் விரும்பினார். இல்லையேல், இன்று உங்கள் உடலில் உள்ள கை நாளை உங்கள் உடலிலிருந்து பிரிந்து, வேறொருவரின் உடலின் இணைந்து செயல்பட்டாலோ, இன்று உங்கள் உடலில் உள்ள இதயம் விலகி, பின்னர் வேறொருவரின் உடலில் இணைந்து செயல்பட்டாலோ, எவ்வாறு ஒருவரின் உடல் பாகங்கள் ஒழுங்காகச் செயல்பட இயலும். அநேகர்களின் உடல்களின் பாகங்களான, இதயங்கள், நுரையீரல், கைகள், கண்கள் பிரிந்து காற்றில் மிதந்து, மற்றவர்கள் உடல்களில் இணைந்து செயல்பட்டு, பின்பு அங்கிருந்து பிரிந்து மற்றவர்கள் உடல்களில் இணைந்து செயல்பட்டால், எப்படியிருக்கும் என கற்பனை பண்ணிப்பார்த்தால் அதில் ஏற்படும் குழப்பங்கள் நன்கு புரியும். ஆனால் அவ்வாறு இல்லாமல், அவரவர் உடல்களின் பாகங்கள் அவரவர் உடலோடு இணைந்து ஒன்றாகச் செயல்படும்படி படைத்த கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். மருத்துவ விஞ்ஞானம் சில உடல் பாகங்களை மாற்றி அறுவைச் சிகிச்சை செய்வதை

சாத்தியமாக்கியிருந்தாலும், உங்கள் உடலின் ஒவ்வொரு உறுப்புகளும் மற்ற உறுப்புக்களோடு இணைந்து சீராகச் செயல்படுவதின் மூலமாகவே, உடல் நன்கு இயங்குகிறது. பல்வேறு செயல்களைச் செய்து முடிக்க ஏதுவாகிறது.

இயேசுவின் உடலாகிய சபையும் இவ்வாறே செயல்படுகிறது. நாம் நடைமுறையில் பார்க்கும்பொழுது, விசுவாசிகள் ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்குத் தாவிக்கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. ஆனால், அவர்கள் அவ்வாறு சபைவிட்டுச் சபை மாறுவது தேவ சித்தமோ, கிறிஸ்தவ வாழ்க்கையோ அல்ல. ஒரு விசுவாசி எந்த சபையில் இருக்க தேவன் விரும்பி, அதில் அவரை இணைத்தாரோ, அந்த சபை அங்கத்தினர்களோடு சேர்ந்து செயல்படுவதே அவருடைய விருப்பம். அவ்வாறாக, நாம் அந்த சபையில் அர்பணிப்போடு இணைந்து செயல்படும்பொழுதுதான் தேவனின் முழு ஆசீர்வாதங்களையும் நாம் அனுபவிக்க முடியும். மாறாக, இன்று ஒரு சபை, நாளை ஒரு சபை என்று சபைக்குச் சபை தாவிக்கொண்டிருப்பவர்களால், தேவ செயல் எதுவும் செய்ய முடியாது, தேவ செயல்களைச் செய்ய அவர்கள் மற்றவர்களுக்கு உதவியாகவும் இருக்க மாட்டார்கள்.

கடவுள் நமக்குத் தந்த பொறுப்பில் நாம் அர்பணிப்புடன் இருக்கும்போது மட்டுமே, நீண்டகால ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் பெற முடியும். நம்மில் பலருக்கு “ஞாயிற்றுக்கிழமை பொழுதுபோக்கு” வேண்டும், அதனால்தான் இன்று ஒரு சபை, நாளை ஒரு சபை என்று நாம் சபைக்குச் சபை தாவி வருகிறோம். நாம் கேட்க விரும்பும் செய்தியை போதகர் பிரசங்கிக்க வேண்டும் என்றும் நாம் விரும்புகிறோம். ஒருவேளை போதகர் நம் பொறுப்பு, அர்பணிப்பு, பற்றிய தேவ வார்த்தையைப் பிரசங்கித்தால், அதில் பெரும்பாலும் நம் மனம் ஈர்க்கப்படாமல், சிந்தைகள் வேறு காரியங்களில் ஈடுபடுகிறது. அந்தச் சபையை விட்டு விலகி வேறு சபையைத் தேடுகிறோம்!

ஆனால், நீங்கள் நீண்டகால நன்மைகளையும் கடவுளுடைய ஆசீர்வாதங்களையும் பெற விரும்பினால், நீங்கள் உங்கள் உள்ளூர் சபையோடு இணைந்து, உங்கள் பொறுப்புக்களை அர்பணிப்போடு செய்து, உங்களோடு இணைந்துள்ளவர்களுக்குச் சேவை செய்ய கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

## அன்பளிப்புகள்

**எபிரெயர் 11:6**
**கடவுளை உண்மையுடன் தேடுகிறவர்களுக்கு அவர் அன்பளிப்புகளைக் அளிக்கிறார்.**

நாம் கடவுளை உண்மையுடன் தேட வேண்டும். கடவுளைத் தேடுவதில் ஒரு அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். நாம் கடவுளைத் தேடுவதில் அர்பணிப்போடு இருக்கிறோமா? அல்லது நமக்கு ஓய்வு நேரம் கிடைக்கும் போதுமட்டும் அவரைத் தேடுகிறோமா? ஜெபத்தில் அவரோடு நேரத்தை செலவிடுவதற்கும், அவருடைய வார்த்தையைப் படிப்பதற்கும் நாம் ஒரு அர்பணிப்போடு இருக்கிறோமா? அல்லது நேரம் கிடைத்தால் மட்டுமே அதைச் செய்கிறோமா? தன்னை உண்மையோடு தேடுபவர்களுக்கு அவர் அன்பளிப்புகளை அளிக்கிறார் என்று வேதம் கூறுகிறது. அவ்வாறு அர்பணிப்போடு அவரைத் தேடுகிறவர்கள், தங்கள் வாழ்க்கையில் கடவுள் தரும் அன்பளிப்புகளை பெற்று அனுபவிப்பார்கள்.

## வளர்ச்சி

**1 தீமோத்தேயு 4:14-15**
**14 நீ கடவுளுடைய வேலைக்கு என்று சேர்ந்த நாட்களில், இயேசுவை நம்பி வாழ்கிற குழுவினரை வழிநடத்தும் தலைவர்கள், உன் தலைமீது கை வைத்து அவர் வேலைசெய்ய உன்னை அர்பணித்தார்கள் அல்லவா. அப்பொழுது, கடவுள் மனதை அறிந்து, பரிசுத்த ஆவியானவர் உனக்குக் இந்த வரங்களை கொடுத்திருக்கிறார் என்று அவர்கள் சொன்னவைகளை, நீ ஒருபோதும் அசட்டையாக நினைக்காதே!**
**15 அவர்கள் அவ்வாறு சொன்னவைகளையும், என்னுடைய புத்திமதிகளையும் நீ முழுமனதோடு கைக்கொண்டு வளர்ச்சியடைவதை பார்க்கும் மக்களுக்கு மாதிரியாக உன் வாழ்க்கை இருக்கட்டும்.**

தாங்கள் எடுத்த தீர்மானத்தில் உறுதியுடன் இருப்பவர்கள் நிச்சயம் வளர்ச்சியடைவார்கள். கடவுளுக்கு எப்படி ஊழியம் செய்யவேண்டும் என்று இளைஞரான தீமோத்தேயுவுக்கு பவுல் புத்திமதி சொல்கிறார். அந்த புத்திமதிகளை அரை மனதுடனோ, அல்லது தன்னுடைய வசதியின்படி வெறுமனேயோ பின்பற்ற வேண்டாம் என்றும் கூறுகிறார். மாறாக, அவருக்குக்கு

சொல்லப்பட்ட புத்திமதிகளை முழுமனதோடு கைக்கொள்ள அறிவுறுத்துகிறார். அவ்வாறு செய்யும்போது, தீமோத்தேயுவுடைய வளர்ச்சி, முதிர்ச்சி, முன்னேற்றம், மற்றும் அவருடைய ஆவிக்குரிய மேம்பாடுகளை அனைவரும் பார்த்துப் புரியும்படி இருக்கும் என்றும் கூறுகிறார்.

அதே கோட்பாடுகளை நம் வாழ்க்கையிலும் நாம் பயன்படுத்தலாம். கடவுளின் ஊழியராக நாம் அர்பணிப்புடனும், ஆத்தும அறுவடை செய்வதில் பொறுப்புடனும், மற்ற விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக வாழும் அர்பணிப்புடனும், திருச்சபை மக்களை வழிநடத்தும் அர்பணிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு நாம் அர்பணிப்புடன் இருக்கும்போது, நமது ஆவிக்குரிய வளர்ச்சி மற்றவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். இவ்வாறாக, அர்பணிப்புடன் இருப்பவர்கள் நிச்சயம் வளர்ச்சியடைவார்கள். மாறாக, கடவுள் தங்களுக்குக் கொடுத்த பொறுப்புக்களை அரை மனதுடன் செய்பவர்கள் பின்தங்குவார்கள். நம் வாழ்வின் முழுமையையும், அதாவது, ஆவி, ஆத்மா, உடல்-ஆகிய முழுமையையும் கொடுத்து, கடவுள் நமக்குக் கொடுத்த பொறுப்புக்களை செய்யும்போது, நிச்சயம் வளர்ச்சி அடைவோம். அவ்வாறான, நம் வளர்ச்சியை மக்கள் பார்ப்பார்கள்.

## 3. நீங்கள் அர்பணிப்புடன் இருக்கிறீர்களா?

கடவுள் உங்களுக்குக் கொடுத்த பொறுப்புக்களை நீங்கள் அர்பணிப்புடன் செய்கிறீர்களா என்று யாராவது நம்மிடம் கேட்டால், “ஆம் நான் அர்பணிப்போடுதான் செய்கிறேன்” என்று சட்டென பதிலளிப்போம். ஆனால், பின்வரும் கேள்விகளுக்கு நீங்கள் உண்மையிலேயே பதில் சொல்ல முயலும்போது, நாம் எந்த அளவுக்கு அர்பணிப்போடு அவர் வேலைகளைச் செய்கிறோம் என்ற தெளிவு நமக்குக் கிடைக்கும்:

- அவர் எனக்குக் கொடுத்த பொறுப்புக்களை அர்ப்பணிப்போடு செய்கிறேனா? அல்லது எனக்கு வசதியான நேரங்களில் மாத்திரம் செய்கிறேனா?
- சரியானதைச் செய்ய நான் அர்பணிப்போடு இருக்கிறேனா? எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், எந்தச் சூழ்நிலையானாலும் நேர்மையானதைச் செய்ய அர்பணிப்போடு இருக்கிறேனா? அல்லது என்னுடைய வசதிக்கு ஏற்ப சமரசம் செய்துகொண்டோ, நிலைப்பாட்டை சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டோ இருக்கிறேனா?
- நம் வாழ்வை ஆளும் இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய சரீரமான திருச்சபைக்கும், நாம் சேர்ந்துள்ள திருச்சபை மக்களிடமும் அர்பணிப்போடு வாழ்கிறேனா? அல்லது ஏதோ கடமைக்கு என்று பழகுகிறேனா?
- என்னுடைய மனைவிக்கும் அல்லது கணவனுக்கும், என் திருமண வாழ்விலும், என் குடும்ப அங்கத்தினர்களிடமும் அர்பணிப்போடு வாழ்கிறேனா? அல்லது ஏதோ கடமைக்கு என்று வாழ்கிறேனா? வாழ்க்கையின் ஏற்ற தாழ்வுகளில், நம் மனைவியை அல்லது கணவனை ஒன்றுபோல நேசிக்கிறேனா?
- வாக்குக் கொடுத்தால் அதை நிறைவேற்றுவதில் நான் பொறுப்புடன் இருக்கிறேனா?
- வேலை செய்யும் இடங்களிலும், எனது மேலாளர்கள், என்னுடைய சக பணியாளர்கள் மற்றும் என் நண்பர்களோடு நான் பொறுப்புடன் நடந்துகொள்கிறேனா? அல்லது ஏதோ கடமைக்கு என்று வேலைகளைச் செய்கிறேனா?

- கடவுளோடு செலவிடும் நேரங்களில் பொறுப்புடன் நடந்துகொள்கிறேனா? அல்லது ஏதோ கடமைக்கு என்று நேரம் வேதம் வாசித்து, ஜெபிக்கிறேனா?

நம் வாழ்வை ஆளும் இயேசு கிறிஸ்துவோடான நம் உறவு எவ்வளவு அர்ப்பணிப்போடு இருக்கிறது? “என்னால் உங்களை எல்லாரும் வெறுப்பார்கள். ஆனாலும், கடைசிவரை என்னை விட்டுக்கொடுக்காது வாழ்கிறவர்கள் வாழ்வைக் கடவுள் காப்பாற்றுவார். ” என்று மத்தேயு 10:22-ல் நம் வாழ்வை ஆளும் இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

நமக்கு வசதியாகவும், இலகுவாகவும் இருக்கும்போது மட்டுமே நாம் அவரை வணங்குகிறோமா? அல்லது அவரை வணங்குவதால், மக்கள் நம்மை வெறுக்கும்போது கூட, நம் வாழ்வில் என்ன நடந்தாலும் கடைசி வரை அவரைப் பின்பற்றும் அர்பணிப்போடு இருக்கிறோமா? இயேசு கிறிஸ்துவோடான நம் உறவு எந்த அளவு ஆழமாகவும் அர்பணிப்புடனும் இருக்கிறது?

நீங்கள் கலந்துகொள்ளும் திருச்சபை மக்களோடான உங்கள் அர்பணிப்பு எப்படி இருக்கிறது? நல்ல இசை, நல்ல பிரசங்கங்கள் மற்றும் எல்லாமே சுமூகமாகவும், சுலபமாகவும் இருக்கும்போது மட்டுமே நாம் திருச்சபை மக்களோடு நன்றாக இருக்கிறோமா? அல்லது புயல் போன்ற சில போராட்டங்களின் காலத்தில்கூட நாம் திருச்சபை மக்களோடு பொறுப்புடன் இருக்கிறோமா? நம்முடைய திருச்சபையில் போராட்டங்கள், பிரச்சனைகளின் நேரங்களில், திருச்சபை மக்களோடு இணைந்து கஷ்ட நஷ்டங்களில் பங்கெடுக்கிறோமா அல்லது பிரச்சனைகள் வந்தவுடன் வேறு திருச்சபையைத் தேடிப்போகிறோமா?

அனைத்து மக்கள் திருச்சபையாராகிய நாங்களும், வெளியே சென்று இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கிக்க எங்களை அர்பணித்துள்ளோம். நாங்கள் வெளியே சென்று இயேசுவைப் பற்றி பிரசங்கிக்கும்போது, மக்கள் கவனத்தை ஈர்க்கும் எண்ணத்தோடு போகிறோம். அப்பொழுது நாங்கள் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடலாம். சரி நமக்கு ஏன் பிரச்சனை? என்று, பிரச்சனை இல்லாத வேறு திருச்சபையைத் தேடிச் செல்வோமா? அல்லது அந்தத் திருச்சபையிலேயே இருப்போமா? "ஆண்டவரே, நான் இந்த திருச்சபையாகிய உடலில் ஒரு அங்கம் என்று நான் நம்புகிறேன். ஆகவே, இந்த உடல் துன்புறுத்தப்பட்டால், நானும் அதோடு சேர்ந்து துன்பத்தை அனுபவிப்பேன் என்ற உறுதியுடன் இருக்கிறேனா? எங்களுக்கு வரும் கஷ்டம் எங்கள் எல்லோருக்குமானது?" என்ற எண்ணம் நமக்கு இருக்கிறதா? மாறாக, எல்லாம் நன்றாகவும் சுலபமாகவும் இருந்தால் மட்டுமே நான் இந்தத் திருச்சபையில் இருப்பேன்; கஷ்டங்கள் துன்புறுத்துதல் வந்தால் இந்தச் திருச்சபை எனக்குத் தேவையில்லை என நீங்கள் நினைத்தால், அனைத்து மக்கள் திருச்சபை உங்களுக்குப் பொருத்தமான திருச்சபையாக இருக்காது. ஆனால், இயேசுவை அறிவிப்பதால் வெட்கப்படவும், கஷ்டப்படவும் நேர்ந்தாலும் பரவாயில்லை என்று நீங்கள் ஒரு திருச்சபையைத் தேடினால், எங்கள் திருச்சபை உங்களுக்கு மிகவும் பொருத்தமான திருச்சபையாக இருக்கும்! அப்படியான உங்களை, எங்கள் திருச்சபை அங்கத்தினர்களாக சேர நாங்கள் வரவேற்கிறோம்.

இருளில் வாழும் மக்களை, கடவுளின் அற்புதமான வெளிச்சத்திற்கு கொண்டுவர, நற்செய்தியைப் பிரசங்கிக்க கடவுள் நம்மை நியமித்துள்ளார். நாம் அதைச் செய்யும்போது, பிசாசு அமைதியாக இருக்க மாட்டான். இருப்பினும், திருச்சபையில் இணைந்த நாம், அதினால்வரும் துன்புறுத்தல்களைத் தாங்கிக்கொண்டு, வலுவாக வெளியே வந்து அவர் வெளிச்சத்தை பற்றி அறிவிக்க, நாம் தயாராக இருக்க வேண்டும், அர்பணிப்போடும் இருக்க வேண்டும். ஒரு உடலாக கடவுள் நமக்கு அளித்த தரிசனத்தில் நாம் அர்பணிப்போடு இருக்க வேண்டும்.

நம் திருச்சபையோடு இணைந்துள்ள மற்ற உறுப்பினர்களோடு இணைந்து செயல்பட நாம் அர்பணிப்போடு இருக்கிறோமா? நாம்

ஒருவரையொருவர் பொறுப்புடன் கவனிக்கிறோமா? நாம் ஒருவரையொருவர் நேசிக்கிறோமா?

நம் நகரத்தில் உள்ள கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் நாம் அர்பணிப்புடன் செயல்படுகிறோமா? அந்த அர்பணிப்போடு செயல்பட்டால், நம் நகரத்தில் உள்ள திருச்சபைகளை வழிநடத்த, கடவுள் எழுப்பிய போதகர்கள், ஊழியர்களை நாம் தரக்குறைவாகப் பேசத் தயங்குவோம். அவர்களின் நல்வாழ்வை நாம் எப்போதும் நாடுவோம். சிலர் விசுவாச வாழ்வில் தடுமாறி, விழுந்து, தவறுகளைச் செய்தாலும், அவர்களுக்காக நாம் ஜெபிப்போம், அவர்கள் உறவைத் துண்டிக்க நினைக்கமாட்டோம்.

நம் வாழ்வில் கடவுள் தந்த தரிசனங்கள், கனவுகள் மற்றும் கடவுள் நம்மை எதற்காக அழைத்தார் என்பதில் அர்பணிப்போடு செயல்படுகிறோமா? “ஆகவே, எனக்குப்பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவுக்காக நீங்கள் எடுக்கிற முயற்சி, செய்கிற செயல்கள் அனைத்திற்கும் நிச்சயம் பலன் உண்டு என்பதை மனதிற்கொண்டு, சோர்வில்லாமல் அவருக்காக வாழுங்கள், பிரயாசப்படுங்கள், ஊழியம் செய்யுங்கள்.” (1 கொரிந்தியர் 15:58) என்று வேதம் சொல்கிறது. கர்த்தருக்காக நீங்கள் செய்யும் வேலை, ஒருபோதும் வீணாகப் போகாது என்பதை நீங்கள் அறிந்து எப்பொழுதும் அர்பணிப்போடு அவருக்கு வேலை செய்யுங்கள்.

**வெளிப்படுத்துதல் 3:15-16**
**15 நீ எப்படி எனக்காக வேலை செய்கிறாய் என்று எனக்கு நன்கு தெரியும். எப்படியென்றால், குளிர்காலத்தில் சுடுதண்ணீர் குடிப்பதில் உள்ள சுகம் போன்றோ, அல்லது வெயில் காலத்தில் குளிர்ந்த தண்ணீர் குடிப்பதில் உள்ள சுகம் போன்றோ நீ எனக்காக வாழும் வாழ்க்கை இருந்தால் நன்றாக இருக்கும்.**
**16 ஆனால், வெதுவெதுப்பான தண்ணீரைக் குடித்தால், வாந்திவருவதுபோல இருக்கும் அல்லவா. அதுபோல, நீ இரண்டும் கெட்டானாக வாழ்கிறபடியால், என்னோடு சேர்ந்து வாழத்தகுதியில்லாதவனாக இருக்கிறாய்.**

ஆகவே, கிறிஸ்துவுக்காக வாழ்வதில் ஒரு சிறப்பான அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். இயேசுவுக்காக எதையோ செய்கிறோம் என்ற மந்தமான வாழ்க்கை வாழ்வது கூடாது. நம் வாழ்வை ஆளும் இயேசு கிறிஸ்துவுக்குச் செய்கிற நம் வேலை ஒரு அர்பணிப்பில்

துவங்கவில்லை என்றால், நம்முடைய சிறப்பான செயல்பாடுகள்கூட வெறுமையில் முடியும். ஆகவே, ஒன்று அவருக்காக அர்பணிப்புடன் வாழவேண்டும், இல்லையேல் சும்மா இருக்க வேண்டும். அதாவது, அவருக்கான சூடான வாழ்வா? அல்லது குளிர்ந்த மந்தமான வாழ்வா என்று தீர்மானியுங்கள்.

கடைசி நாட்களில், அநேகரின் அன்பு குறைந்து போகும் என்று கிறிஸ்து நம்மை எச்சரித்திருக்கிறார். " இவ்வாறாக, கெடுதல்கள் உலகில் அதிகமாகிப் போவதால், மக்களுக்கிடையே உண்மையான அன்பு என்பது குறைந்துகொண்டே போகும். ஆனால், தங்கள் வாழ்க்கையின் கடைசி கட்டம்வரை என்மீது நம்பிக்கையோடு வாழ்கிறவர்கள் வாழ்வு நிச்சயம் காப்பாற்றப்படும்" (மத்தேயு 24:12-13). ஆகவே, இயேசு கிறிஸ்துவிற்காக நீங்கள் அர்ப்பணிப்போடு வாழும் வாழ்க்கை உங்களைக் கடைசிவரை எல்லாவற்றையும் சகித்து வாழவைக்கும்.

ஆகவே, உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்து வாழ இதுவே சரியான நேரம்!

# ஆல் பீபிள்ஸ் சர்ச் பங்காளர்களே

ஆல் பீபிள்ஸ் சர்சின் ஊழியர்கள் உள்ளூர் திருச்சபை என்ற எல்லையை கடந்து இந்தியா முழுவதையும், குறிப்பாக வட இந்தியா முழுவதையும் சென்றடைந்துள்ளனர். அவர்களின் முக்கிய நோக்கம், (அ)தலைவர்களை பலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களுக்கு ஊழியத்தில் விருப்பம் ஏற்படச் செய்தல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தை கட்டமைத்தல். மேலும் இளைஞர்களுக்கான பயிற்சி கருத்தரங்குகள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கான மாநாடுகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. கூடுதலாக, பல ஆயிரம் புத்தகங்களின் பிரதிகள் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன, இது, வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகள் வளர உதவுகிறது.

ஒரு முறை உதவி அல்லது மாதாந்திர நிதி உதவி அனுப்புவதன் மூலம் நிதி ரீதியாக எங்களுடன் பங்காளராக உங்களை அழைக்கிறோம். நாடு முழுவதும் நாங்கள் செய்யும் இந்த வேலையில் எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பக்கூடிய எந்தத் தொகையும் பெரிதும் மதிக்கப்படும். உங்கள் உதவியை "ஆல் பீபிள்ஸ் சர்ச்" க்கு செலுத்த வேண்டியதை காசோலை / வங்கி வரைவு காசோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். எங்கள் வங்கி கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கி பரிமாற்றத்தின் ஊடாக உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**கணக்கு பெயர்: All peoples church**
**கணக்கு எண்: 0057213809**
**IFSC குறியீடு: CITI0000004**
**வங்கி: சிட்டி வங்கி என்.ஏ., எண் 5, எம்.ஜி. சாலை, பெங்களூரு, கர்நாடகா 560001**

தயவுசெய்து கவனிக்கவும்: இந்தியாவை தளமாக கொண்ட வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஆல் பீபிள்ஸ் சர்ச்சால் ஏற்றுக்கொள்ள முடியும். உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, நீங்கள் விரும்பினால், உங்கள் பங்களிப்பு குறிப்பிட்ட எந்த APC ஊழிய பகுதிக்கு அல்லது இடத்திற்கு பயன்படுத்தப்பட விரும்புகிறீர்கள் என்பதை குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு apcwo.org/give என்ற இணையப் பக்கத்தை பார்வையிடவும்

மேலும், எப்போதுதெல்லாம் உங்களால் முடியுமோ எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்துக்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள். நன்றி, கடவுள் உங்களை ஆசீர்வாதிப்பாராக!

# இலவச வெளியீடுகள்

A Church in Revival*
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks*
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change*
Code of Honor
Divine Favor*
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling*
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God*
God Is a Good God
God's Word
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife*
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses-Don't Take Them
Open Heavens*
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith *
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus *
The Night Seasons of Life
The Power of Commitment*
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power*
The Wonderful Benefits of speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different*
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து புத்தகங்களும் இலவசமாக PDF -ஆக தரவிறக்கம் செய்ய எமது திருச்சபை வலைத்தளமான **apcwo.org/books** பார்க்கவும். இந்த வெளியீடுகள் வேறுபல மொழிகளிலும் உள்ளன. இவைகளை புத்தகவடிவில் இலவசமாகப் பெற எமது மின்னஞ்சல் அல்லது அஞ்சல் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

எமது திருச்சபை வலைத்தளம் **apcwo.org**-ல் இலவச ஒலி, ஒளி வடிவில் பிரசங்கங்களைக் கேட்கலாம், பிரசங்க குறிப்புகளைப் படிக்கலாம், டெலிவிஷன் நிகழ்ச்சிகள், மேலும் பலவைகளால் நீங்கள் பயனடையலாம்.

# ஆல் பீப்புள் சர்ச்யைப் பற்றி

ஆல் பீப்புள் சர்ச்சின் தரிசனம் பெங்களூர் பெருநகரத்திற்கு உப்பாக, ஒளியாக திகழவேண்டும் என்பதும், இந்திய தேசத்திற்கும், மற்ற தேசங்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றி குரல் எழுப்ப வேண்டும் என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும், வெளிப்பாடுகளோடும் கடவுளுடைய வார்த்தையில் எந்தக்கலப்படமும் இல்லாமல், முழுமையாக அதை மக்களுக்குச் சொல்லும் அர்ப்பணிப்போடு ஆல் பீப்புள் சர்ச் செயல்பட்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள், ஆவியின் வரங்கள் மூலம் கடவுளுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிப்பதற்கு மாற்றாக, நல்ல இசையோ, புதுபுதுத் திறமைகளைக் காட்டி அறிவிப்பதோ, திறமையாகப் பேசுவதோ, நவீன கால ஊழிய உத்திகளோ மாற்றாக இருக்க முடியாது என்பது எங்கள் நம்பிக்கை (1 கொரி. 2:4-5; எபிரே. 2:3-4). எங்கள் கருப்பொருள் இயேசு கிறிஸ்து. மக்களுக்கு ஊழியம் செய்வது எங்கள் தலையாய நோக்கம், கிறிஸ்துவைப் போல வளர்ச்சியடைவதே எங்கள் நோக்கம்.

பெங்களூரை மைய்யமாகக்கொண்ட ஆல் பீப்புள் சர்ச்சிற்கு இந்தியாவின் பல இடங்களில் கிளை சபைகள் உள்ளது. தற்போது எங்கெங்கே கிளை சபைகள் உள்ளது என்பதை அறிய **www.apcwo.org/locations** என்ற வலைத்தளத்திலோ, **contact@apcwo.org** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவது மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம்.

# கடவுள் உங்களை நேசிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு, கடவுள் இவ்வுலகிற்கு ஒரு மனிதனாக வந்தார். அவர் பெயர் "இயேசு". அவர் ஒரு பாவமும் செய்யாத ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார். இயேசு என்ற பெயரில், கடவுள் ஒரு மனித உடலில் வாழ்ந்தபடியால், அவர் சொன்னது, செய்தது அனைத்தும் கடவுள் எப்படிப்பட்டவர்? என்பதை நமக்குக் காட்டியது. அவர் பேசிய வார்த்தைகள் அனைத்தும், கடவுள் பேசிய வார்த்தைகளாகும். அவர் செய்தவைகள் அனைத்தும், கடவுள் செய்த செயல்களாகும். இந்தப்புவியிலே, இயேசு அனேக அற்புதங்களைச் செய்தார். கஷ்டகளில், வியாதிகளிலிருந்து அனேகரை அவர் குணப்படுத்தினார். குருடான கண்களைப் பார்க்கச் செய்தார்; கேட்க இயலா செவிகளைக் கேட்கச் செய்தார்; நடக்க இயலா கால்களை நடக்கச் செய்தார்; அனைத்துவித வியாதிகளையும் குணமாக்கினார். பசியோடிருந்த ஆயிரமாயிரமானவர்களுக்கு, அற்புதமாக ரொட்டியைப் பெருகச் செய்து, வயிறார சாப்பிட செய்தார்; புயலை அடக்கினார் இவ்வாறாக அனேக ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்.

அவர் செய்த அனைத்து செயல்களுமே, கடவுள் நல்ல கடவுள் என்பதை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது. மக்கள் நன்றாக, சுகமாக, சந்தோசமாக வாழவேண்டும் என்பதே கடவுளுடைய விரும்பம் என்பதையும் புரிந்துகொள்ளச் செய்தார். மனிதர்களுடைய தேவைகளை நிவிர்த்திசெய்வதே அவருடைய விருப்பமாகும்.

அப்படியென்றால், கடவுள் ஏன் மனிதனாக மாறி இவ்வுலகிற்கு வரவேண்டும்? இயேசு ஏன் இவ்வுலகில் வாழ வேண்டும்?

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்மைப் படைத்த கடவுளுக்குப் பிடிக்காதவைகளைச் செய்து பாவிகளாகிப்போனோம். பாவத்திற்கான எதிர் விளைவுகளும் உள்ளது. கடவுளுக்கும், நமக்கும் இடையில் பாவமானது தொடர்புகொள்ள இயலாத் தடையாக இருக்கிறது. இவ்வாறாக, பாவம் நம்மையும், கடவுளையும் பிரிக்கிறது. பாவம், நம்மைப் படைத்த கடவுளோடு நாம் தொடர்புகொள்ள இயலாது, நாம்மால் அவரைப் புரிந்துகொள்ள இயலாது தடுக்கிறது. ஆகவே, அனேகர்கள் இந்தக் குறையைத் தீர்க்க வேறுபல வழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

பாவத்தினுடைய மற்றொரு விளைவு, நித்தியமாக கடவுளைவிட்டுப் பிரிந்து வாழ்வதாகும். கடவுளுடைய நீதிமன்றத்திலே, பாவத்திற்கான தண்டனை, மரணமாகும். மரணம் என்றால் நித்தியமாக அவரைப் பிரிந்து நரகத்தில் வாழ்வதாகும்.

ஆனால், நல்ல செய்தி என்பது, நாம் அந்த பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளோடு தொடர்புகொண்டு அவரோடு சேர்ந்து வாழ இயலும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது, இவ்வுலகின் பாவங்கள் அனைத்திற்குமான விலைக்கிரயத்தை செலுத்திவிட்டார். பின்பு, அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கும்பொழுது, அவர் உயிரோடு இருக்கிறதை அனேகருக்கு காண்பித்து, பின்பு மீண்டும் பரலோகம் செல்கிறார்.

கடவுள் அன்பாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். எந்த மனிதனும் நரகத்திற்குச் செல்லவேண்டும் என அவர் விரும்புவதில்லை. ஆகவே, மனிதர்கள் அனைவரும் பாவத்திலிருந்து விடுபட்டு, பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்ற வழி ஏற்படுத்தவே, அவர் இந்த பூமிக்கு வந்தார்.

உங்களையும், என்னையும் போன்ற பாவ மனிதர்களை பாவத்திலிருந்தும், நித்திய அழிவிலிருந்தும் காப்பாற்றவே அவர் இப்புவிக்கு வந்தார்.

உங்கள் பாவத்திற்குரிய மன்னிப்பை இலவசமாக நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என வேதாகமம் கூறுகிறது. அது என்னவென்றால், நமக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்ததை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**“அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்”** (அப்போஸ்தலர் 10:43).

**“என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்”** (ரோமர் 10:9).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காகச் செய்ததை நம்பி, அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நீங்கள் உங்கள் பாவத்திற்கு கடவுளிடம் மன்னிப்புப் பெற்று, உங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்படுகிறீர்கள்.

இயேசு கிறிஸ்து, சிலுவையில் உங்களுக்காக என்ன செய்தார் என்று அவர் மீது உங்களுக்கு நம்பிக்கைவரும் தீர்மானத்தை எடுக்க பின்வரும் மாதிரி ஜெபத்தை நீங்கள் செய்யலாம். இயேசு கிறிஸ்து உங்களுக்காகச் செய்தவைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அவருடைய மன்னிப்பையும், பாவக்கறைகளிலிருந்து சுத்திகரிப்பையும் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவலாம். இந்த ஜெபம் நீங்கள் எப்படிச் ஜெபிக்கலாம் என்று உதவுவதற்கேயாகும். அதன்பின்பு, நீங்களே சொந்தமாக ஜெபிக்கலாம்.

என் வாழ்வை ஆளும் இயேசுவே! நீங்கள் சிலுவையில் எனக்காக என்ன செய்தீர்கள் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீங்கள் எனக்காக மரித்தீர்கள். நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற, உங்களுடைய விலைமதிக்க இயலா இரத்தத்தைச் என் பாவங்களுக்கு விலைக்கிரயமாகச் செலுத்தினீர்கள். உங்களை நம்புகிறவர்களுக்கு, பாவங்களுக்கான மன்னிப்பு கிடைக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது.

ஆகவே, நீங்கள் எனக்காக சிலுவை மரணத்தின் மூலம் செய்தவைகளையும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் செய்தவைகளையும் இன்று நான் நம்புகிறேன். நான் என்னதான் நல்ல செயல்களைச் செய்தாலும், என் வாழ்வை என்னால் காப்பாற்ற இயலாது என்பது எனக்குத் தெரியும். உங்களிடம் என் பாவத்திற்கான மன்னிப்பை பெற, என்னால் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

நீங்கள் எனக்காக மரித்தீர்கள், என் பாவத்திற்கான விலையைச் செலுத்தினீர்கள்; மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தீர்கள் என்று இன்று நான் மனதார நம்புகிறேன்; இந்த நம்பிக்கையின் மூலம், நீங்கள் என்னை மன்னிக்கிறீர்கள், என் வாழ்வைச் சுத்தமாக்குகிறீர்கள் என்று வாயாற அறிக்கையிடுகிறேன். நன்றி இயேசுவே! உங்களைத்த தொடர்ந்து நேசிக்க உதவுங்கள். உங்களை மேலும் அறிந்து, உங்களுக்கு உண்மையாய் வாழ உதவுங்கள். ஆமென்.

# All Peoples Church Bible College
# apcbiblecollege.org

.

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீபிள்ஸ் சர்ச் பைபிள் கல்லூரி மற்றும் ஊழிய பயிற்சி மையம் (APC-BC), ஆவியால் நிறைந்து, அபிஷேகம் செய்யப்பட்ட, பரிசுத்த ஆவியின் அற்புத வல்லமையில் ஊழியம் செய்வதற்கான தயார்படுத்தல் மற்றும் மூல உபதேசத்தில் ஆழமான மற்றும் மேதமைத்துவத்தை வெளிப்படுத்தும்படி கடவுளுடைய வார்த்தையைப் படிப்பது. நாங்கள் நம்புவது என்னவென்றால், முழுமையான தேவ மனிதனாக ஒருவரை ஊழியத்திற்கு வளர்த்தெடுப்பது, கடவுளுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்ற செய்வது, மற்றும் அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களை நிகழ்த்துவது - இவை அனைத்தும் கடவுளுடனான நெருக்கமான உறவு மற்றும் பிணைப்பிலிருந்து தான் சாத்தியமாகின்றன என்பது தான்.

APC-BC இல் கூடுதலாக ஆழமான போதனைகள், கடவுளின் அன்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் இருப்பு மற்றும் கடவுளின் அற்புதங்கள் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டுவதன் மூலம் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்கள் மற்றும் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளின் அழைப்பை நிறைவேற்ற பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று படிப்புகளை வழங்குகிறோம்:

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் ஒரு ஆண்டு சான்றிதழ் (C.Th.)
- இரண்டு ஆண்டு இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் டிப்ளமோ (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் மூன்று ஆண்டு இளங்கலை (B.Th.)

ஒவ்வொரு வாரமும், திங்கள் முதல் வெள்ளி வரை காலை **9:00 மணி** முதல் பிற்பகல் **1 மணி** வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தினமும் வந்து செல்லும் மாணவர்கள், நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் இல்லத்தரசிகள் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் மற்றும் பிற்பகல் 1 மணிக்குப் பிறகு உங்கள் அன்றாட பணியைத் தொடரலாம். தங்கி பயில விரும்பும் மாணவர்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனிதனி விடுதி வசதிகள் உள்ளன. வாரம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவர்கள் களப்பணி, சிறப்பு கருத்தரங்குகள், பிரார்த்தனை மற்றும் துதிஆராதனை அமர்வுகளில் பங்கேற்கின்றனர். பிற்பகல் அமர்வுகளில் தினம் வந்து செல்லும் மாணவர்கள் (குடியிருப்பு அல்லாத மாணவர்கள்) விரும்பினால் பங்கேற்கலாம், கட்டாயம் அல்ல. அனைத்து மாணவர்களும் வார இறுதி நாட்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் தேவாலயங்களில் சேவையாற்ற நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், தகுதிகள், கல்விச் செலவுகள் பற்றி தெரிந்துகொள்ள மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்குவது பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து எங்கள் இணைய பக்கத்தை பார்வையிடவும்: apcbiblecollege.org

APC-BC is accredited by the Nations Association for Theological Accreditation (NATA).


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

இன்றைய உலகில், அர்பணிப்பு என்ற நல்ல ஒரு பண்பை மக்களிடம் காண்பது மிகவும் அரிதாக இருக்கிறது. பெரும்பாலான மக்கள் தங்களுக்கு வசதியானதை மட்டும் செய்ய விரும்புவதால், அர்பணிப்புள்ள நபர்களை கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. அர்ப்பணிப்பு என்பது ஒரு ஒழுக்கம். அர்பணிப்பு என்பது நமக்கு நாமே முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும்.

அர்பணிப்பைப் பற்றி வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. "எப்படி ஒருவன் இரண்டு பேர்களுக்கு வேலை செய்தால், அந்த இரண்டு பேர்களையும் திருப்த்திப்படுத்த முடியாமல், ஒருவனுக்கு நல்லவனாகவும், இன்னொருவனை அசட்டை செய்தும் வாழ்வானோ, அதுபோல கடவுளுக்கும் பிரியமாக வாழவேண்டும், இந்த உலக சுகங்களையும் நன்கு அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் வாழ்வு இருக்கிறது." (மத்தேயு 6:24) என்று இயேசு கூறியிருக்கிறார். இது மனிதனுடைய இயல்பு என்று இயேசு குறிப்பிடுகிறார். ஒன்றுக்கு முரணான இன்னொரு வேலையை வைத்துக்கொண்டு இரண்டிலும் அர்பணிப்பணிப்போடு ஒருவர் வாழமுடியாது. இந்த புத்தகம் அர்ப்பணிப்பின் சக்தியை வலியுறுத்துகிறது, மேலும் நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் அர்பணிப்போடு செய்ய இந்த புத்தகம் உங்களை ஊக்குவிக்கும். நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் அர்பணிப்போடு செய்ய வேண்டிய நேரம் இதுவேயாகும்!

ஆசீஸ் ராய்சூர்

All people church & world outreach
#319,2nd floor,7th main HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka India

Phone +918025452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org